செ.வெ.எண்.340 நாள்.29.05.2018.

## ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்திட்டம்

## INTEGRATED FINANCIAL AND HUMAN RESOURCE MANAGEMENT SYSTEM (IFHRMS)

திருநெல்வேலி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டத்தின் திறனூட்டல் பயிற்சி கூட்டம்28/05/2018 முதல் நடைபெற்றுவருகிறது. இத்திறனுட்டல் பயிற்சியினைமாவட்ட ஆட்சியர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ் இ.ஆ.ப., அவர்களின் முன்னிலையில்கருவூலக் கணக்குத் துறை, முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் திரு.தென்காசி சு.ஜவஹர்,இ.ஆ.ப., அவர்கள்29.05.2018 முற்பகல் 10.00 மணியளவில் பார்வையிட்டு தெரிவித்ததாவது:

நிதி மேலாண்மை தொடர்பான அரசுப் பணிகள் திறம்பட நடைபெற, மாநில அரசு நிதி மேலாண்மை மற்றும் மாநில அரசு மனித வள மேலாண்மையை இணைத்து ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. தற்பொழுது நடைமுறையில் உள்ள தன்னியக்க கருவூலப் பட்டியல் ஏற்பளிக்கும் முறை, வலை தள சம்பளப் பட்டியல் மற்றும் மின்னனு வழி ஓய்வூதியம் ஆகியன இத்திட்டத்தில் சேர்க்கப்படவுள்ளன. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக, அரசு ரூபாய் 288.91 கோடி நேரடி ஒப்பளிப்பு செய்து அரசாணை வழங்கியுள்ளது.

இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு திட்ட ஒருங்கிணைப்பு நிறுவனமாக ஒரு தனியார் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்தக் கூடிய அலுவலகங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கான பணிகளும் மென்பொருள் உருவாக்கும் பணிகளும் தற்சமயம் நடைபெற்று வருகின்றது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மாநிலம் முழுவதும் உள்ள சுமார் 29,000 பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் (**Drawing and Disbursing Officers**) நேரடி இணையத்தின் மூலம் சம்பளப்பட்டியல் மற்றும் இதர பட்டியல்களை கருவூலத்தில் சமர்ப்பிக்க இயலும். மேலும் இத்திட்டத்தில் அரசின் வருவாயினை இணையவழி மூலம் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளதால் அரசின் நிகழ் நேர வரவினை உடனுக்குடன் அறிய இயலும். நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் எண்ம ஒப்பம் (Digital Signature) மற்றும் விரல் ரேகைப் பதிவுமுறை (Biometric) மூலம் உறுதிப்படுத்துவதன் மூலம் மாநிலத்தின் நிதி நிலை விபரம் உடனுக்குடன் அரசுக்குக் கிடைப்பதுடன் நிதி மற்றும் மனித வள மேலாண்மை நிர்வாகம் சிறப்பாக நடைபெற வழி வகுக்கும். தேவையற்ற கால தாமதமும் முறைகேடுகளும் தவிர்க்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் சுமார் 9 இலட்சத்திற்கும் மேற்பட்ட அரசுப் பணியாளர்களின் பணிப்பதிவேடு பராமரிப்பு எளிமையான முறையில் கணினிமயமாக்கப்பட்டு சம்பளப்பட்டியல், பதவி உயர்வு, மாறுதல்கள், விடுப்பு மற்றும் இதர விபரங்கள் அவ்வப்போது உடனுக்குடன் பதியப்படும்.இப்பணியினை அக்டோபர்-2018க்குள் முடித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

அரசுப் பணியில் சேர்ந்தது முதல் ஓய்வு பெறும் வரை உள்ள அரசுப் பணியாளர்களின் பணி வரலாறானது முழுமையாக இத்திட்டத்தின் மூலம் கணினிமயமாகிறது.

இதன் மூலம் பணிப்பதிவேடுகளைப் பராமரிக்கும் பணியிலிருந்து விடுபட்டு அலுவலர்கள் தங்களது துறையின் ஆக்கபூர்வப் பணிகளில் ஈடுபடமுடியும். இதனால் பல்வேறு அலுவலகங்களுக்கு இடையேயும் வெவ்வேறு ஊர்களுக்கு இடையில் பணிப்பதிவேடுகள் மாற்றப்படுவதால் ஏற்படும் காலவிரயம் குறைவதோடு, பணிப்பதிவேடு காணாமல் போகக்கூடிய சூழ்நிலையும் முடிவுக்கு வரும். பணிப்பதிவேடுகள் அவ்வப்போது கணினி மூலம் ஆய்வு செய்யப்படுவதால் நடவடிக்கைகள் உடனுக்குடன் எடுக்கப்பட்டு ஓய்வூதியம் தாமதமின்றி வழங்கப்படும். பணியாளர் தொடர்பான அரசின் ஆய்வுக்கும் திட்டமிடலுக்கும் இக்கணினி ஆவணங்கள் உதவும். ஆதாரப் பூர்வமான பணி விபரங்கள் கணினியில் இருப்பதினால் பணிமாற்ற முடிவுகள் தாமதமின்றி முறையாக எடுக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் திருநெல்வேலிமாவட்டத்தில் உள்ள 46,044அரசு ஊழியர்களின் பணிப்பதிவேடுகள் கணினிமயமாக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினை சிறப்பாக நடைமுறைப்படுத்த நான்கு நாட்கள் பயிற்சி சில பணம் பெற்று வழங்கும் அலுவலா்களுக்கும், கூடுதலாக இரண்டு நாட்கள் பயிற்சி கருவூல அலுவலா்களுக்கும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அனைத்து பணம் பெற்று வழங்கும் அலுவலா்களுக்கும் பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சியின் கீழ் சம்பளம் மற்றும் சம்பளம் சாரா பட்டியல்கள் தயாரித்தல் மற்றும் இதர இனங்கள் தொடர்பாக அனைத்து துறை அலுவலா்களுக்கும் மேலும் பட்டியல் கடவு செய்தல், காப்பறை செயல்பாடுகள் முத்திரைத்தாட்கள் மேலாண்மை, மின் அலுவலகம், ஓய்வூதியம் வழங்கல் மற்றும் இதர இனங்கள் குறித்து கருவூலத்துறை அலுவலா்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## 2. ஓய்வூதியர்களுக்கான சேவைகள்

மூத்த குடிமக்களை பாதுகாத்து அவா்களது நலனைப் பேணுவது கடமையாகும். அதனடிப்படையில் ஓய்வூதியா்களுக்கான பலன்கள் மற்றும் சலுகைகளை வழங்குவதில் கருவூலக் கணக்குத்துறை விரைந்து செயல்பட்டு அவா்களுக்கான பலன்களை அளித்து வருகிறது. ஓய்வூதியா்களுக்கான முதலாவது ஓய்வூதியம், 80 வயதான ஓய்வூதியா்களுக்கு கூடுதல் ஓய்வூதியம், ஓய்வூதிய தொகுத்து பெறா தொகை பிடித்தம் முடிந்ததும் உடன் கூடுதல் வழங்க வேண்டிய ஓய்வூதியத்தினை அனுமதித்து வழங்குதல் போன்ற பணிகள் உடனுக்குடன் செய்யப்பட்டு வருகிறது.

ஓய்வூதியா்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத்திட்டத்தின் கீழ் மருத்துவ சிகிச்சைபெற 726 மருத்துவமனைகள் அனுமதிக்கப்பட்டிருந்தது. தற்போது இது 805 மருத்துமனைகளாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாவட்ட தலைநகரங்களில் அமையப் பெற்றுள்ள மருத்துவமனைகள் மட்டுமல்லாது தாலுகா தலைமையிடங்களிலும் உள்ள மருத்துவமனைகள் இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் மூலம் ஓய்வூதியா்கள் மற்றும் அவா்களது வாழ்க்கைத் துணைவியா் தாங்கள் வசிக்கும் பகுதிக்கு அருகிலுள்ள அனுமதிக்கப்பட்ட மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 1,90,502 பேர்கள் ரூ.549.08 கோடிக்கான மருத்துவ சலுகையினைப் பெற்றுள்ளனா்.

## 3. ஓய்வூதியர்களுக்கான வருடாந்திர நேர்காணல்

ஓய்வூதியா்கள் அனைவரும் தங்கள் உயிர்வாழ் விபரத்தினை வருடந்தோறும் கருவூலத்தில் தெரிவிக்கவேண்டும். ஓய்வூதியா்களுக்கான வருடாந்திர நேர்காணல் ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதம் முதல் ஜீன் மாதம் வரை தமிழகம் முழுவதும் 31 மாவட்ட கருவூலங்கள், 238 சார்கருவூலங்கள் மற்றும் சென்னை ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் உட்பட மொத்தம் 270 மையங்களில் நடைபெறும். இவ்வருடம் திருநெல்வேலிமாவட்டத்தில் உள்ள 37,336ஓய்வூதியா்களின் நேர்காணலுக்காக உரிய வசதிகள் மாவட்ட கருவூலம் மற்றும் 13 சார்நிலைக் கருவூலங்களில் செய்யப்பட்டு உள்ளது.

இது தவிர கடந்த ஆண்டு முதல் ஜீவன் பிரமான் என்ற மத்திய அரசின் இணையதளம் மூலம் மின்னனு உயிர்வாழ் சான்று(Digital Life Certificate) பெற்று கருவூலத்தில் பதிவு செய்து கொள்ள கூடுதல் வசதி ஏற்படுத்தப்பட்டு உள்ளது. இதற்காக தமிழக அரசு இ-சேவை(e-Seva) மையங்கள் மூலம் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இதன் மூலம் ஓய்வூதியதாரா்கள் தற்போது வசிக்கும் இடங்களுக்கு அருகாமையில் உள்ள இ-சேவை(e-Seva) மையங்கள் மூலம் கருவூலத்திற்கு செல்லாமலேயே தங்கள் வாழ்வுச் சான்றினை சமா்ப்பிக்கலாம். மேலும் இணையதளவசதிகள் மற்றும் விரல்ரேகைபதிவு(Finger Print Reader) வசதிகள் இருப்பின் உலகின் எந்த இடத்திலிருந்தும் மின்னனு உயிர் வாழ்வுச் சான்றினை கருவூலகத்திற்கு அளிக்க இயலும். இவ்வசதியை பயன்படுத்தி நேர்காணலை முடித்துக் கொள்ளவும், தங்கள் வீண் அலைச்சலை தவிர்ப்பதோடு, நேரத்தையும் சேமிக்கலாம் என முதன்மைச்செயலா்/ஆணையர் மற்றும் கருவூலக் கணக்குத்துறை அவா்கள் தெரிவித்துள்ளார்கள்.

## 4.ஓய்வூதியர்களுக்கு அரசு அடையாள அட்டை

தமிழ்நாடு அரசின் மூலம் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரா்கள், குடும்ப ஓய்வூதியதாரா்களுக்கு அரசு அடையாள அட்டை வழங்க அரசாணை எண் 87, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 10-04-2017-இல் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஓய்வூதியா்களுக்கான அடையாள அட்டை அரசு இ-சேவை மையங்கள் மூலம் ரு.30 கட்டணத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

**5.ஓய்வூதியம் பொதுத்துறை வங்கிகள் மூலம் பெறுவது மாற்றியமைத்தல்**

அரசாணை எண் 268, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 18-09-2017ன் படி, பொதுத்துறை வங்கிகள் மூலம் ஓய்வூதியம் பெற்று வந்த நடைமுறை மாற்றியமைக்கப்பட்டு கருவூல முன்னோடித்திட்டத்தின் கீழ்கருவூலத்தின் வாயிலாக ஓய்வூதியம் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால் சுமார் 79114 ஓய்வூதியதாரர்கள் பயனடைந்து வருகின்றனர்.

**6.சம்பளம் மற்றும் ஓய்வூதியம் வழங்குதல்:**

கடந்த 2017-2018ம் நிதியாண்டில் ஓய்வூதியம் மாவட்டத்தில் **ரூ. 1774.81**கோடி அரசு ஊழியர்களுக்கான ஊதியமும் **ரூ.1167.76**கோடி ஓய்வூதியமும், மாவட்டக் கருவூலம் மற்றும் மாவட்டம் முழுவதும் உள்ள 13 சார்நிலை கருவூல அலுவலகங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அரசின் வரவினமாக இந்நிதியாண்டில் மட்டும் திருநெல்வேலிமாவட்டத்தில் **ரூ.5074.13**கோடி அரசுக் கணக்கில் கருவூலங்கள் வழியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருமதி.அ.பாத்திமா சாந்தா., மண்டல இணை இயக்குநர் (திருநெல்வேலி மண்டலம்) கருவூலம் மற்றும் கணக்குத்துறை,திருநெல்வேலி,திரு. A.M.ஆதவன்.முதன்மை கணக்கு அலுவலர்,திருமதி. S. மின்னிபாய்,கருவூல அலுவலர்,மாவட்டக் கருவூலம்திருநெல்வேலி மற்றும் பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.